மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.

2022 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 11ஆம் நாள் வெள்ளிக் கிழமை

1873ம் ஆண்டு 11ஆவது ஏற்பாட்டின்படி திருமதி.வி.லட்சமி, இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

OS.No. 156/2018 வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

பெயர் .. சுப்பிரமணி வயது .. 68

த/பெ. .. கோவிந்தசாமி சாதி ..

11.3.2022 - வா.சா.1 முதல் விசாரணை தொடர்ச்சி.

நான் இந்த வழக்கில் வாதி. நான் எனது முதல் விசாரணையை பிரமாண வாக்குமூலமாக ஏற்கனவே தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பிரமாண வாக்குமூலத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்துதான். அதில் உள்ள விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். படித்துப் பார்த்து தான் கையெழுத்து போட்டேன். 08.03.1988 வாதியின் தந்தையின் இறப்பு சான்றிதழின் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்ட நகல் வா.சா.ஆ.1. 01.09.1987ல் வாதியின் பெயரில் கூட்டாக வாதியின் தந்தை எழுதி வைத்த அசல் உயில் பத்திரம் வா.சா.ஆ.2. 27.03.1997ல் வாதி தன் சகோதரரிடம் கிரையம் பெற்ற அசல் கிரைய பதிவு பத்திரம் வா.சா.ஆ.3. 01.11.2011ல் வாதியின் பெயரில் அரசு கூட்டாக வழங்கிய கணிணி சிட்டா வா.சா.ஆ.4. 13.01.2012ல் வாதியின் பெயரில் அரசு வழங்கிய அடங்கல் வா.சா.ஆ.5. வாதி அரசுக்கு செலுத்திய தீர்வை ரசீதுகள் எண்ணிக்கை 4 வா.சா.ஆ.6. மேற்கண்ட ஆவணங்கள் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன். பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

(Sd)/-D.Ravi,
District Munsif,
Polur.